மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் நாள் திங்கள்கிழமை
இ.ம.எண்.463/2017
அ.வ.எண்.47/2013

1. கோபால்
2. அறிவு ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிராக/

ஐசக் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 24.02.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எல்.கணபதிசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.கே.அர்ஜூனன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் காலவரையறைச்சட்டம் பிரிவு 5 ன் கீழ் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச தீர்ப்பினை ரத்து செய்ய மனுதாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1207 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்கக்கோரி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிர்மனுதாரர்/வாதியின் சுவாதீனத்திற்கு இடையூறு செய்வதாக கூறி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது எதிர்மனுதாரர்/வாதி வழக்கு தாக்கல் செய்தார். அவ்வழக்கு ஒருதலைப்பட்ச தீர்ப்பானது. இவ்வழக்கினை தாக்கல் செய்த பின்னிட்டு 05.04.2013 மற்றும் 10.04.2013 தேதிகளில் பள்ளிக்கு செல்ல பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த மனுதாரர்களின் மகனை எதிர்மனுதாரரும், அவரது உறவினர்களும் துப்பாக்கியை காட்டி கொலை மிரட்டல் விடுத்தனர். இதுகுறித்து

கொளத்தூர் காவல் நிலையத்திலும், மேட்டூர் கோட்டாட்சியரிடத்திலும் மனுதாரர்களின் மகன் புகார் கொடுத்தும், அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மனுதாரர்களின் மகன் மனதளவில் பாதிக்கப்பட்டு, சுயநினைவு இழந்து 11.10.2015 ல் சேலம் மருத்துவமனையில் இறந்துவிட்டார். மனுதாரர்கள் மகன் இறந்த துக்கத்தில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த வழக்கினை பற்றிய நினைவு இல்லாமலும், வழக்கறிஞரை சந்திக்க இயலாமலும் போய்விட்டது. வழக்கு விவரம் குறித்து எந்த தகவலும் வழக்கறிஞரிடமிருந்து கிடைக்கவில்லை.

(ii) இந்நிலையில் ஏர்.ஆ.டி.30/2016 மனுவில் 27.02.2017 ல் நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஒரு அறிவிப்பு கிடைத்தது. மனுதாரர்கள் 27.02.2017 ல் நீதிமன்றத்தில் ஆஜரான பின்னிட்டு வழக்கறிஞரை பார்த்த பிறகு தான் வழக்கு ஒருதலைப்பட்ச தீர்ப்பான விபரம் மனுதாரர்களுக்கு தெரிய வந்தது. 27.02.2017 லிருந்து 30 நாட்களுக்குள் தீர்ப்பை ரத்து செய்ய முறையான மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர். இருப்பினும் எச்சரிக்கையின் பொருட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். அசல் வழக்கில் வெற்றிபெற போதிய வாதுரைகளும், வாய்ப்புகளும், ஆவணங்களும் மனுதாரர்களுக்கு உள்ளது. எனவே 09.10.2013 ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச தீர்ப்பினை ரத்து செய்ய மனுதாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1207 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்க கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனு சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் பொய்யானது. தீர்ப்பான தேதியிலேயே மனுதாரர்களுக்கு தீர்ப்பு குறித்து தெரியும். ஆனால் வெறுமனே இருந்து விட்டு 1200 நாட்கள் காலதாமதமாக மனுதாக்கல் செய்துள்ளனர். இதிலிருந்து வேண்டுமென்றே காலதாமதமாக மனுதாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. மனுதாரர்களின் பிரமாண பத்திரிக்கையின்படிக்கு அவர்களது மகன் 11.10.2015 ல் இறந்துள்ளதாக கூறியுள்ளார்கள். ஆனால் தீர்ப்பானது 09.10.2013 லேயே பிறப்பிக்கப் –பட்டுவிட்டது. மனுதாரர்கள் தங்களுடைய வழக்கறிஞர் மூலம் 28.02.2013 ல்

ஆஜராகிவிட்டு 14.09.2013 வரை எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. ஆகவே 14.09.2013 ல் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்பின்னர் கடந்த 09.10.2013 ல் எதிர்மனுதாரர் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ–1 முதல் 3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு வழக்கு தீர்ப்பானது. ஏ.ஆர்.டி. மனுவில் அறிவிப்பு பெற்றதற்கு பின்னிட்டு தான் ஒருதலைப்பட்ச தீர்ப்பு குறித்து தெரியும் என கூறுவது பொய்யாகும். மனுதாரர்கள் மனுவிலேயே தீர்ப்பானவுடன் தெரியும் என கூறியுள்ளனர். ஆகவே மனு நிலைக்கத்தக்கதல்ல என்பதால் மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>4) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர்கள் தரப்பில் 1ம்மனுதாரர் ம.சா.1 ஆகவும், 2ம்மனுதாரர் ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, 05.04.2013 ல் மனுதாரர்களின் மகன் மெய்யழகன் கொளத்தூர் காவல் ஆய்வாளரிடம் அளித்த புகார் மனு ம.சா.ஆ.1 ஆகவும், 10.04.2013 ல் மனுதாரர்களின் மகன் மெய்யழகன் கொளத்தூர் காவல் ஆய்வாளரிடம் அளித்த புகார் மனு ம.சா.ஆ.2 ஆகவும், 11.04.2013 ல் மனுதாரர்களின் மகன் மெய்யழகன் மேட்டூர் கோட்டாட்சியரிடம் அளித்த புகார் மனு ம.சா.ஆ.3 ஆகவும், 26.04.2016ம் தேதியிட்ட மெய்யழகனின் இறப்புச்சான்றிதழ் ம.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிர்மனுதாரர்/வாதியின் சுவாதீனத்திற்கு இடையூறு செய்வதாக கூறி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது

எதிர்மனுதாரர்/வாதி வழக்கு தாக்கல் செய்தார் எனவும், அவ்வழக்கு ஒருதலைப்பட்ச தீர்ப்பானது எனவும், இவ்வழக்கினை தாக்கல் செய்த பின்னிட்டு 05.04.2013 மற்றும் 10.04.2013 தேதிகளில் பள்ளிக்கு செல்ல பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த மனுதாரர்களின் மகனை எதிர்மனுதாரரும், அவரது உறவினர்களும் துப்பாக்கியை காட்டி கொலை மிரட்டல் விடுத்தனர் எனவும், இதுகுறித்து கொளத்தூர் காவல் நிலையத்திலும், மேட்டூர் கோட்டாட்சியரிடத்திலும் மனுதாரர்களின் மகன் புகார் கொடுத்தும், அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், மனுதாரர்களின் மகன் மனதளவில் பாதிக்கப்பட்டு, சுயநினைவு இழந்து 11.10.2015 ல் சேலம் மருத்துவமனையில் இறந்துவிட்டார் எனவும், மனுதாரர்கள் மகன் இறந்த துக்கத்தில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த வழக்கினை பற்றிய நினைவு இல்லாமலும், வழக்கறிஞரை சந்திக்க இயலாமலும் போய்விட்டது எனவும், வழக்கு விவரம் குறித்து எந்த தகவலும் வழக்கறிஞரிடமிருந்து கிடைக்கவில்லை எனவும், இந்நிலையில் ஏர்.ஆ.டி.30/2016 மனுவில் 27.02.2017 ல் நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஒரு அறிவிப்பு கிடைத்தது எனவும், மனுதாரர்கள் 27.02.2017 ல் நீதிமன்றத்தில் ஆஜரான பின்னிட்டு வழக்கறிஞரை பார்த்த பிறகு தான் வழக்கு ஒருதலைப்பட்ச தீர்ப்பான விபரம் மனுதாரர்களுக்கு தெரிய வந்தது எனவும், 27.02.2017 லிருந்து 30 நாட்களுக்குள் தீர்ப்பை ரத்து செய்ய முறையான மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர் எனவும், எச்சரிக்கையின் பொருட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கில் வெற்றிபெற போதிய வாதுரைகளும், வாய்ப்புகளும், ஆவணங்களும் மனுதாரர்களுக்கு உள்ளது எனவும், எனவே 09.10.2013 ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச தீர்ப்பினை ரத்து செய்ய மனுதாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1207 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்க கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) எதிர்மனுதாரர் தரப்பில் மனு சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் பொய்யானது எனவும், தீர்ப்பான தேதியிலேயே மனுதாரர்களுக்கு தீர்ப்பு குறித்து தெரியும் எனவும், ஆனால் வெறுமனே இருந்து விட்டு 1200 நாட்கள் காலதாமதமாக மனுதாக்கல் செய்துள்ளனர் எனவும், இதிலிருந்து வேண்டுமென்றே காலதாமதமாக மனுதாக்கல்

செய்துள்ளது தெரியவருகிறது எனவும், மனுதாரர்களின் பிரமாண பத்திரிக்கையின் படிக்கு அவர்களது மகன் 11.10.2015 ல் இறந்துள்ளதாக கூறியுள்ளார்கள் எனவும், ஆனால் தீர்ப்பானது 09.10.2013 லேயே பிறப்பிக்கப்பட்டுவிட்டது எனவும், மனுதாரர்கள் தங்களுடைய வழக்கறிஞர் மூலம் 28.02.2013 ல் ஆஜராகிவிட்டு 14.09.2013 வரை எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை எனவும், ஆகவே 14.09.2013 ல் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது எனவும், அதன்பின்னர் கடந்த 09.10.2013 ல் எதிர்மனுதாரர் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ–1 முதல் 3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு வழக்கு தீர்ப்பானது எனவும், ஏ.ஆர்.டி. மனுவில் அறிவிப்பு பெற்றதற்கு பின்னிட்டு தான் ஒருதலைப்பட்ச தீர்ப்பு குறித்து தெரியும் என கூறுவது பொய் எனவும், மனுவிலேயே தீர்ப்பானவுடன் தெரியும் என கூறியுள்ளனர் எனவும், ஆகவே மனு நிலைக்கத்தக்கதல்ல என்பதால் மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் 1ம்மனுதாரர் ம.சா.1 ஆகவும், 2ம்மனுதாரர் ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். மனு பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ளவாறு மனுதாரர்கள் சாட்சியமளித்துள்ளனர். மனுதாரர்கள் கூறுவதுபோல் ஏ.ஆர்.டி மனு அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கு பின்பு தான் மனுதாரர்களுக்கு ஒருதலைப்பட்ச தீர்ப்பு குறித்து தெரியுமா என்பதை பரிசிலனை செய்ததில் ம.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையில்

> "சத்தியபிரமாண வாக்குமூலம் பத்தி 4 ல் குடும்ப சூழ்நிலை காரணமாக வழக்கில் ஆஜராகவில்லை எனக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பாகிவிட்டது என ஆரம்பத்திலேயே எனக்கு தெரியும் என குறிப்பிடப்பட்டது என்றால் ஆமாம். அதனை தெரிந்து கொண்டு தான் பின்னிட்டு காலதாமதமாக மனு செய்துள்ளேன் என்றால் ஆமாம்."

என சாட்சியமளித்துள்ளார். ம.சா.2 ம் தன்னுடைய முதல் விசாரணையிலேயே குடும்ப சூழ்நிலையின் காரணமாக ஆஜராகவில்லை எனவும், அப்போதே தீர்ப்பாகிவிட்டது எனவும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியங்களிலிருந்தே மனுதாரர்களுக்கு தீர்ப்பு ஏற்பட்டபோதே தெரியும் என்பது தெரியவருவதால் ஏ.ஆர்.டி. மனுவின் அறிவிப்பிற்கு

பின்னிட்டு ஒருதலைப்பட்ச தீர்ப்பு குறித்து தெரியவந்ததாக கூறுவது ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(iv) இந்நிலையில் எதிர்மனுதாரரும், அவரது உறவினர்களும் மனுதாரர்களின் மகனை மிரட்டியதாக கூறுவது குறித்து இம்மனுவில் தீர்மானிக்க முடியாது. இருந்த போதும் மனுதாரர்களின் மகன் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் எனவும், அதன் காரணமாக 11.10.2015 ல் இறந்துவிட்டார் என கூறி ம.சா.ஆ.4 இறப்புச்சான்றிதழ் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது தெரியவருகிறது. ம.சா.ஆ.4 லிருந்து மனுதாரர்களின் மகன் 14.10.2015 ல் இறந்துள்ளது தெரியவருகிறது. ஆகவே மனுதாரர்களின் மகன் உடல்நிலை சரியில்லாததால் இம்மனுவை தாக்கல் செய்ய முடியவில்லை என கூறுவது ஏற்புடையது என்பதாலும், இவ்வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கை தகுதியின் அடிப்படையில் தீர்மானிப்பது இருதரப்பினருக்கும் உகந்தது என்பதாலும், வழக்கில் மனுதாரர்கள் கட்சி செய்ய ஒரு வாய்ப்பு வழங்கலாம் என்பதாலும் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. ஆனால் மனுதாரர்களால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரயத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு ரூ.1500/−செலவுத்தொகையாக அளிக்கும் பட்சத்தில் இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு ரூ.1500/−செலவுத்தொகையாக 14.03.2022 க்குள் அளிக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 15.03.2022.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/−திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:–</u>

ம.சா.1 திரு.கோபால் (1ம் மனுதாரர்)

ம.சா.2 திருமதி.அறிவு (2ம் மனுதாரர்)

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 05.04.2013 | மனுதாரர்களின் மகனான மெய்யழகன் கொளத்தூர் காவல் ஆய்வாளரிடம் அளித்த புகார் மனு | அசல் |
| ம.சா.ஆ.2 | 10.04.2013 | மனுதாரர்களின் மகனான மெய்யழகன் கொளத்தூர் காவல் ஆய்வாளரிடம் அளித்த புகார் மனு | நகல் |
| ம.சா.ஆ.3 | 11.04.2013 | மனுதாரர்களின் மகனான மெய்யழகன் மேட்டூர் கோட்டாட்சியரிடம் அளித்த புகார் மனு | அசல் |
| ம.சா.ஆ.4 | 14.10.2015 | மெய்யழகனின் இறப்புச்சான்றிதழ் | அசல் |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.